**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 05ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.**

**பொருள் எண்– 1**

இந்நகராட்சி செயல்படுத்தப்படும் Swatchh Bharatch Mission (**SBM**) 2015–2016 திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் 10 பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.38984/2014/P1, நாள்.05.11.2015ன்படி ரூ.160.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் 10 பணிகளில் 8 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு பணிகளான இந்நகராட்சி புதிய உரக்கிடங்கிற்கு ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான இயந்திரங்கள் விநியோகம் செய்து நிறுவுதல் பணி மற்றும் மேற்காணும் இயந்திரங்களுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கூரை அமைக்கும் பணியினை நிர்வாக காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் 04.10.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் **SBM** திட்டம் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின் படி இந்நகராட்சி புதிய உரக்கிடங்கிற்கு தேவையான இயந்திரகள் விநியோகம் செய்து நிறுவுதல் பணி மற்றும் மேற்காணும் பணிகளுக்கு மேற்கூரை அமைக்கும் பணி ஆகிய இரண்டு பணிகளுக்கு மாற்றாக அதே மதிப்பீட்டுத்தொகை ரூ.47.00 இலட்சத்தில் இந்நகராட்சி பகுதியில் அமைக்கப்படும் நுண்உரக்குடில்களுக்கு (Micro Compost Center) தேவையான Light Commericial Vechicle (LCV) வாகனங்கள் அதே மதிப்பீட்டுத்தொகையில் வாங்கிட அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் பணிக்கான நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதிப் பெற்று நடவடிக்கை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக

**(ந.க.எண். 5572 /2015/இ1)**

**தீர்மானம் எண். 241**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 2**

இந்நகராட்சிப் பகுதி அயன் புஞ்சை சர்வே எண்.42/1 ஏக்கர் 2 செண்டு 75 மற்றும் சர்வே 39/1ல் ஏக்கர் 2 செண்டு 29ல் மேல் பாதி ஏக்கர் 1.13ல் உள்ள சொத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் சத்துணவு கூடம் கட்டியது தொடர்பாக வழக்கு எண்.80/2017(II appeal) வழக்கு சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளை வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்காணும் வழக்கின் பொருள் குறித்து கிழ மொகல்லா முஸ்லீம் ஜமாத் அதன் தலைவர் கலந்தர் மஸ்தான் அவர்கள் மூலம் முதன்மை சார்பு நீதிமன்றம் தென்காசியில் O.S.No.43/2016ன்படி வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து, 07.09.2018 அன்று விசாரணைக்கு வரப்பெற்று அதன் பேரில் இந்நகராட்சி ஆணையாளரை சாட்சியாளராக ஆஜராக தெரிவிக்கப்பட்டது. ஆகவே சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் S.A.No.80/2007ன்படி மேற்காணும் வழக்கு குறித்த பொருள் நிலுவையில் இருக்கும்போது முதன்மை சார்பு நீதிமன்றம் தென்காசியில் 43/2016ன்படி தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக C.R.P.(MD) No.2055/2018ன்படி இடைக்காலத்தடை ஆணை பெறப்பட்டுள்ளது. ஆகவே மேற்காணும் வழக்கிற்கு தடை ஆணை பெறப்பட்டதற்கு வழக்கு கட்டணம் ரூ.25000/–யை திரு.எம்.இராஜராஜன் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கபடுகிறது.

அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 18.09.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வழக்கு கட்டணம் ரூ.25000/– திரு.ராஜராஜன் அரசு

வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3821/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 242</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**தனிஅலுவலர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**